DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | DVC. No. 7/2023 |
| Deposition of witness | : | P W– 2 |
| Name | : | மதிவாணன் |
| Father’s /Husband Name | : | ராகுகாலம் |
| Village | : | ஏனங்குடி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 66 |
| Occupation | : | ராணுவ வீரர் ஓய்வு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 04th day August, 2025.
Respondent absent.  Petition under section 355 BNSS filed and allowed.

**எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன்.  நான் தாக்கல் செய்துள்ள நிறுபன வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.  எனது மகள் திருமணத்திற்கு சீர்வரிசை பொருட்கள் மற்றும் நகை வாங்கியதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.  எனது மகளை எதிர் மனுதாரர் கொடுமை செய்ததாக கூறும் விவரங்கள் நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான் ஆனால் எங்கள் வீட்டில் எதிர்மனுதாரர் செய்த பிரச்சனைகள் எனக்க நேரடியாக தெரியும். எதிர்மனுதாரர் எத்தனை நாட்கள் எங்கள் வீட்டில் இருப்பார் என்றால் சுமார் 2 நாட்கள் இருப்பார்.  அவ்வாறு தங்கிய நாட்களில் பிரச்சனை இல்லாமல் சந்தோஷமாக இருப்போம் என்றால் சரிதான்.  நான் சொல்வது போல் எதிர்மனுதாரர் எந்த கொடுமையும் செய்யவில்லை என்றாலும் நான் மனுவிற்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.  எனது மகளின் பிரசவத்திற்கு எதிர்மனுதாரர் மருத்துவமனைக்கு வந்துவிட்டார் என்றால் சரிதான்.  நான் கூறிய விவரங்கள் அனைத்தும் கற்பனையானவை என்றால் சரியல்ல.  நகை காணாமல் போனது தொடர்பாக போலிசில் புகார் கொடுத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு விசாரித்தபோது நாங்கள் எடுக்கவில்லை என்று கூறிவிட்டோம்.  மர சாமான் மற்றும் சீர் வரிசை சில்வர் பொருட்களை தவிர எதிர்மனுதாரரிடம் எந்த நகைகளும்

கிடையாது என்றால் சரியல்ல. எனது மகள் எங்களிடம் செல்போனில் பேசுவார் என்றால் குழந்தை பிறந்த 7 மாதம் வரை பேசினார். எனது மகள் பொய் புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எனது வீட்டுக்கு வரும்போது அவரை நான் ஆடு மாடு மேய்க்க சொன்னேன் என்றாலும் அதற்கு அவர் மறுத்ததால் இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்லும் அளவிற்கு எதிர்மனுதாரர் வருமானம் ஈட்டவில்லை என்றால் சரியல்ல.

M S
BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.08.20 17:56:09 +0530